# கடவுள்வாழ்த்துப்பா

மொழிபெயர்த்தவர், பாடியவர், தொகுத்தவர்
கலைமாணி
**பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி**

1940

விலை: சதம் உடு

292
கிங்ஸ்
SL/PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள்வாழ்த்துப்பா

முதற்பிரிவு
மொழிபெயர்ப்பு
இருவதுபிரிவு
கடவுள் அலங்கல்
மூவதுபிரிவு
திருமுறை
திருமொழி

முறையே
மொழிபெயர்த்தவர், பாடியவர், தொகுத்தவர்
கலைமாணி
**பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி**

292 கிங் 54 pm
Permanent Reference Not to be l
கொழும்பு தமிழச் சங்கம்
42127 நூலகம்

1940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி
இலங்காபிமானி அச்சியந்திரசாலை

# முன்னுரை

ஒருகாலத்தவருக்கு, ஒருநாட்டாருக்கு, ஒருசமயத்தவருக்குக் கடவுள் உரியர் அல்லர். எக்காலத்தவருக்கும், எல்லாநாட்டினர்க்கும், எல்லாச்சமயத்தவருக்கும், கடவுள் தந்தை. ஆகவே, அவரது அருளைச் சுவைத்திராத காலமும் நாடும் சமயமும் இல்லை. தமிழில் சிவனடியாரும் வைணவபாகவதரும் பாடிய அருட்பாக்களையும் பிரபந்தங்களையும் சிறிது கற்ற நான், அவ்வண்ணமே ஊத சமயப் பத்தரும் கிறைஸ்தவசமயப் பத்தரும் பாடியுள்ள பாடல்களையும் கற்றுள்ளேன். இப்படி யான் கற்றது என் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமன்று; என் ஆன்ம ஈடேற்றத்தையுங் கருதியே. தமிழில்உள்ள அருட்பாக்கள்போலவே மேலைநாட்டு மொழிகளிலும் அருட்பாக்கள் உள. அவற்றை ஆங்கிலத்தில் கற்ற யான், என்உடன்தமிழரும் அவற்றை அறிய வேண்டும் என விருப்புற்று, தமிழில் தமிழ்யாப்பிலக்கணத்திற்கேற்ப, சில அருட்பாக்களை மொழிபெயர்த்துளேன். யான் இங்கு மொழிபெயர்த்த பாக்களுட் சில முன்னமே வேறு சிலர் தமிழில் மொழிபெயர்த்தவை. ஆயினும் அன்னார் தமிழ்யாப்பிலக்கணத்தைச் சிறிதும் கவனியாது ஆங்கில இராகங்களுக்கிசைய அவற்றை மொழிபெயர்த்து நமக்குத் தந்துளார். இப்படி இவர் செய்தமை நன்னோக்கத்தோடேயே எனினும் இம்முறை தவறுள்ளது என்பது அறிஞர் பலர் கொள்கை. ஆங்கிலச்சொற்கள் ஒருபகுதி எடுத்தும் இன்னொருபகுதி படுத்தும் உச்சரிக்கும் இயல்புடையன. இவ்வகைஓசை தமிழ் மொழிகளுக்கு இயல்பில் இல்லை. இயல்பில்லாத எடுத்தலும் படுத்தலும் தமிழுள் நுழைப்பதால் வந்தபயன் இயல்பன்று, விகாரமே. ஆங்கிலம் பயின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு இவ்விகாரம் விகாரம்போலாகாது இயல்புபோற் றோன்றும். ஆங்கிலம் பயிலாதவர் இப்பாக்களைப்பாட முயல்கையில் அவர்படும்கஷ்டம் இவர் அறியார். இப்படிச் செய்வார் தமிழில்உள்ள வெண்பா கட்டளைக்கலித்துறை விருத்தங்களை ஏன் ஆங்கிலத்தில் புகுத்தவில்லை? அப்படிச் செய்வது விபரீதமாயின் இப்படிச் செய்வதும் விபரீதமன்றோ? ஆகவே, தமிழ்மொழிக்கு உரிய இராகங்களிலேதான் மொழிபெயர்க்கும் பாடல்களும் இருத்தல் அவசியம்.

இதுநிற்க. யான் இங்கு தெரிந்தெடுத்த ஆங்கில அருட்பாக்கள் பாடியோர் மொழிவல்லுநர், அருளில் ஆழ்ந்தவர். அப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பவரும் மொழிவல்லுநரும் அருளாழியிற் படிந்தவருமாய் இருத்தல் அவசியம். மொழிவன்மையும் பத்தியாழமும் இல்லாத யான் இதிற் தலையிட்டது வேறொருவரும் இதனைச் செய்யாததினாலன்றோ? ஆங்கிலக் கிறைஸ்தவ பத்தர் நாடியநாட்டமும், கண்டகாட்சியும், பெற்றபேறும் இவையெனத் தமிழர் அறிதல் வேண்டும் என்னும் ஆசையே என்னை நெருக்கி ஏவினது.

இப்பணியில் என்னைப் பலமுறை தூண்டின பெரியார் ஒருவர் உளர். அவர் வயதிற் பெரியர், அறிவிற் பெரியர், பத்தி அனுபவத்திற் பெரியர். அவர்
**பேராசிரியர் ஜேம்ஸ் முத்தையா ஹென்ஸ்மன் அவர்கள்.** இவர் விரும்பியவண்ணம் இன்னும் பல அருட்பாக்களை மொழிபெயர்க்க எனக்கு அவகாசம் நேரிடாமையால் வருந்துகிறேன். இப்பொழுது இதனை அச்சிட என்னை ஏவின ஆசை ஹென்ஸ்மன்ஆசிரியர் நம்மோடு இருக்கும் பொழுதே இதனை இவர் காணவேண்டும் என்பதே.



யான் மொழிபெயர்த்தனவும் செய்தனவும் ஆகிய சில பாக்களை எனக்குப் பாடிக்காட்டி, ஊக்கம் விளைத்த ஸ்ரீலஸ்ரீ ச. சா. **சோமசுந்தர தேசிகரையும்** நான் மறவேன்.

இந்நூலில் முதற்பிரிவில் ஆங்கிலமூலத்துக்கும் தமிழ் மொழிபெயர்ப்புக்கும் ஓரோவிடங்களிற் பேதம் காணலாம். காரணம் உய்த்துணர்க.

மூவதுபிரிவில், சிவனடியாரும் வைணவ ஆழ்வாரும் செய்தபாக்களிற் சிலவற்றைத் திரட்டித் தந்துளேன். கிறைஸ்தவரும் முஸ்லீமரும் இவற்றை ஒருவகைக் கூச்சமுமின்றித் தங்கள் வழிபாட்டிற் பாடலாமென்பதே என் துணிபு. இதன் பொருட்டே இப்பாடல்களில் அங்குமிங்கும் சிலசொற்களைத் திரித்துள்ளேன். என் நோக்கத்தை அறிந்தபெரியார் இப்படி நான் செய்ததைப் பிழையென்னார்.

ஒருநாமம் ஓருருவும் இல்லானுக் காயிரந்
திருநாமஞ் சொல்லிநாம் தெள்ளேணம் கொட்டாமோ

என்ன வாதவூரடிகளிடம் கற்ற யான் என் பூசை தியானங்களிலே ‘சிவன்’ ‘நாராயணன்’ முதலிய சொல்வரும் அருட்பாக்களை ஓத எனக்குச் சிறிதும் தடையில்லை. இங்கு நான் இப்படிச் செய்தது இத்துணிபில்லாதார்பொருட்டே.

இப்பிரிவில் உள்ள அருட்பாக்களது பழைய வடிவம் காணவிரும்புவார் அவ்வந்நூற் பதிப்பிற்தான் காணலாம்.

இங்குள்ள பாக்களெல்லாம் தனித்தியானம் தனிப்பூசைகளில் உபயோகிக்கலாம். இவற்றுட் பல சபையாராதனைகளிற் பாடலாம். இதன்பொருட்டே பல பாக்களுக்கு இராகம் தாளம் இவையெனக் குறித்துள்ளேன். சிலபாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையோடு பாடும்பொருட்டு எழுதவில்லை. அவற்றை வாசித்துச் சிந்தித்து நன்மைபெறலாம். இங்கு நான் இப்படிக் கூறுவது மூவது பிரிவிலுள்ள சில பாக்களுக்கும் பொருந்தும்.

Francis Kingsbury

கொழும்பு,
விக்கிரமநெறி ஆனிமீ"

இந்நாலிலுள்ள பாக்கள்சில
நேயர் சிலர் வேண்டுகோளின்படி
அவரவர் பதிப்பித்த நூல்களில் அச்சேறியன.
ஆயினும் இந்நாலில் அவை திருத்தமுற்றிருப்பதால்
இனிமேல் எவரும் என் அனுமதியின்றி
அவற்றை அச்சிடல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் வகை

பற்பலபாட்டுக்குத் தலைப்பில் பண் குறிக்கப்பட்டிருக்கின்றன. பண்கள் எல்லாம் இசைத்தமிழுக்குரியவை. பண்களின் பெயர்களைத் தேவாரத்திருமுறைகளிற் காணலாம். ஆயினும், பண் எல்லாம் இறந்துபட்டொழிந்தனபோலும். ஒருவேளை பண்களிற் சில ஓதுவார்சிலர் அறிந்திருக்கலாம். இப்பொழுது தேவாரங்களைப் பாடுபவர் வடமொழிச் சங்கீத சாத்திரத்திலுள்ள இராக தாளங்களை அமைத்தே பாடுவர். இது காலகதியாற் தமிழுக்கு வந்த ஊறுபோலும். ஆயினும் அன்னையில்லாப்பிள்ளைக்குச் சிற்றாத்தாள் வாய்த்ததுபோல இவ்வடமொழி இராகதாளங்கள் தேவாரத்தைப் பாட உதவியாயினபோலும்.

இந்நூலில் உள்ள பண்களை இன்னின்ன இராகத்திலே பாடலாம் எனக் காட்டுகின்றோம் :

| பண் | இராகதாளம் |
|---|---|
| திருத்தாண்டகம் ... | ... அரிகாம்போதி (தாளம் இல்லை) |
| திருநேரிசை ... | ... ஆரபி ,, ,, |
| பழம்பஞ்சுரம் ... | ... தோடி ரூபகதாளம் |
| காந்தாரபஞ்சமம் ... | ... சகானா சாப்புதாளம் |
| குறிஞ்சி ... | ... சுருட்டி, செஞ்சுருட்டி சாப்பு தாளம் |
| தக்கராகம் ... | ... சங்கராபரணம் ரூபகதாளம் |
| நட்டராகம் ... | ... சங்கராபரணம் ரூபகதாளம் |
| திருக்குறுந்தொகை | ... நாதநாமக்கிரியை ஆதிதாளம் |
| கௌசிகம் ... | ... முகாரி ஆதிதாளம் |



| | |
|---|---|
| பராபரக்கண்ணி ... | ... நீலாம்புரி (பைரவி, ஆனந்த பைரவி, முகாரியிலும் பாடலாம். தாளம் இல்லை) |
| "முத்திநெறி அறியாத"<br>"என்னுயிர்க்கு ஞாயிறு"<br>"என்னப்பன் எம்பெருமான்" | ... ஆரபி ஆதிதாளம் |
| "கல்லார்க்கும் கற்றவர்க்கும்"<br>"மண்ணார்க்கும் விண்ணவர்க்கும்" | செஞ்சுருட்டி ஆதிதாளம் |

இந்நூலிற் பலபாக்களுக்கு இராகதாளங்கள் அமைத்து எனக்கு உதவியவர் பாடினிமணி சுபத்திரையம்மையார். என்மகளுக்கு நான் நன்றிகூறுவது கைக்கு வாய் நன்றி கூறுதல்போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழைதிருத்தம்

| பக்கம் | பாட்டு | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 4 | மன்னும் ஒளி | மன்னும்ஒழி |
| 9 | 5 | கிரிகிரியர்க்கு | கிரிகிபர்க்கு |
| 49 | 1 | புண்கணீர் | புன்கணீர் |

செய்யுள் அடி அலகிடுவதிற் காணும் சில பிழைகளைத் திருத்திப்பாடுக.

## "O GOD, OUR HELP IN AGES PAST"

### எங்கள் துணையே

பண் : திருநேரிசை

1. பண்டைநாள் எங்க ளுக்குப் பழுதிலாத் துணையே, இன்னும்
நண்ணும்ஆண் டுகளில் நாங்கள் வாஞ்சையோ டெதிர்பார்க் [கின்ற
நிண்ணயப் பொருளே, சீறும் புயலில்யாம் ஒதுங்க நேர்ந்த
எண்ணரும் அரணே, என்றும் யாங்கள்வாழ் வீடே, தேவே.

2. நின்திரு இருக்கை நீழல் தன்னிலே நினது தொண்டர்
மன்னிவாழ் வுற்றார், ஆங்கே தீமையொன் றறியார் அன்னார்;
உன்னருந் தீமை ஏதும் உறுமெனில், எம்மைக் காப்பான்
நின்னிரு தோளே போதும், நிச்சயம்; வேண்டா வேறே.

3. குன்றுகள் நிரையில் நிற்கு முன்னரே, குவல யந்தான்
தன்னுரு அடையு முன்னர், தற்பரா, நித்தன் நீயே;
இன்னுட்எண் ணில்லா யாண்டே ஒருபடி யினையாய் என்றும்
துன்னுசீ ருள்ளாய், தோன்றல் திரிதல் கேடறியா வாழ்வே.

4. ஆயிரம் உகங்கள் நிற்குக் கழிந்ததோர் அந்தி போலும்,
பாயிருள் எல்லாம் நீங்கிப் பரிதிதான் எழுவ தன்முன்
மேயவை கறையே போலும்; முதலிடை கடைகள் மேவா
நாயனே, கால காலா, நம்பனே, எங்கள் கோவே.

5. என்றுமோய் வின்று பாயும் யாறுபோற் காலம், அந்தோ,
தன்னரு மைந்தர் எல்லார் தம்மையும் அடித்துச் செல்லா
நின்றதால்; அவர்கள் தம்மை நினைப்பவர் உலகில் இல்லை,
சென்றகங் குலிலிற் கண்ட கனவயர்ப் பதுபோ லன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்டைநாள் எங்க ளுக்குப் பழுதிலாத் துணையே, இன்னும்
நண்ணும் ஆண் டுகளில் நாங்கள் வாஞ்சையோ டெ திர்பார்க்
[கின்ற
நிண்ணயப் பொருளே, தேவே, துயர்எமை நீங்கு காறும்
அண்ணலே, காவாய், ஆவாய் என்றும்யாம் வாழும் வீடே.

Isaac Watts

## "LEAD, KINDLY LIGHT"

## அன்புள ஒளியே

பண் : திருநேரிசை

1. இருள்எனைச் சூழ்ந்த தந்தோ! அன்புள ஒளியே, என்னை
அருள்வழி நடத்து, கங்குல் இருண்டது, வீடோ தூரம்;
திருவுளம் இரங்கி என்றன் சிறடி நீகா; சேய்மை
அரியது காண வேண்டேன், அமையும் ஓர் அடிகண் டாலே.

2. இன்றுநான் இருத்தல் போல என்றும்நான் இருந்தே
[னில்லேன்;
என்றனை நடத்துநீயென் றியான்உனைக் கேட்டே னில்லேன்;
என்னுளப் படியே சென்றேன்; என்வழி தெரிந்தேன் யானே;
இன்றெனை நடத்து நீயே, என்னையா ளுடைய கோவே.

3. பகட்டின பகலை நச்சிப் பாவிநான் திரிந்தேன் ஐயோ!
அகத்தினில் அச்சங் கொண்டே னாயினும் இறுமாப் பென்றன்
அகத்தைஆட் கொண்ட தையோ! அடியனேன் கழிந்த காலம்
தகப்பனே நினையேல்; ஏழைத் தமியனை நடத்து நீயே.



4. இந்தநாள் காறும் உன்றன் வல்லமை தாங்கிற் றென்னை;
குன்றுபுற் றரையே யாற்றில் உளையில் யான் செல்ல நேரின்,
இன்னும்நின் சத்தி தானே என்றனை நடத்தும் மெய்யே;
இந்நிசி விடியும், பின்னே பரிதியும் எழுவா னன்றே.

5. அக்கணம் காண்பேன் யானே அகலிடங் தனிலே சாலத்
துக்கம்நான் சிறிது காலம் கொள்ளஎன் றனைத்து றந்த
மிக்கரும் நேசர் மின்னும் நகைமுகம்; அதுகா றெல்லாத்
திக்கிலும் காலும் செய்ய அன்புள ஒளிகா நீயே.

John Henry Newman

## "O LOVE, THAT WILT NOT LET ME GO"

## என்னைப்போகவிடா நேயமே

பண் : திருத்தாண்டகம்

1. நினையொழிந்து போகவிடா தென்னை ஈர்க்கும்
நேயமே, வேசறும்என் னுயிரை, எந்தாய்,
உனிற்சார்த்து கின்றேன்;நீ தந்த வாழ்வை
உன்றனக்கே மீளவும்நான் தருகின் றேனே,
கனைகடலாம் நினதுநிறை வாழ்வில் என்றன்
கடுகனைய வாழ்வதுதான் கலந்து பாய்ந்து
முனம்இல்லாச் செழுமையொடு நிறையும் வாய்ந்து
மூதுலகில் நனிசிறந்து விளங்கு மாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு தமிழ்ச் சங்கம்



2. என்வழியெல் லாந்தொடரும் ஒளியே, காற்றில்
இயங்கிஅசை என்திரிநான் உனக்குத் தந்தேன்;
என்னுள்ளம் தருகின்ற துனக்கே மீண்டும்
நீதந்த கதிரதனை, இரவி யுன்றன்
துன்னுவெயில் தனில்அதன்றன் பகலே மிக்க
சோதியுடன் அழகமைந்து துலங்கு மாறே,
மன்னுயிர்தாம் இருள்அழுந்தி மாளா வண்ணம்
வானமிசை மிளிர்கின்ற மணிகள் கோவே.

3. கவலைவழி எனைநாடும் களிப்பே, நெஞ்சின்
கதவினைநான் உன்றனக்குச் சாத்து கில்லேன்;
திவலைமழை பொழிகையிலும் வான வில்லே
தெரிகின்ற தென்கண்கள் தமக்கே, எந்தாய்;
"புவனவிருள் புலரும்,பின் காலை தோன்றும்,
புன்கணீர் தோன்றாது போகும்" என்ற
உவமையிலா நின்சொல்லின் சொல்லன் றென்றே
உணர்கின்றேன், என்னுளம்வாழ் உயிரே, தேனே.

4. என்றலையை நிமிர்த்துகின்ற குருசே, உன்னை
யான்நீங்க அருள்கஎனத் துணியேன், கண்டாய்;
இந்நிலத்து வாழ்வும்ஒரு வாழ்வோ என்றே
எறிகின்றேன் அதன்பெருமை துகளில்; அச்சோ!
மண்ணும்ஒளி யாவாழ்வு மலரு கின்ற
மாண்பென்னே அத்துகளி லிருந்து தானே!
அன்னையிலும் அன்புள்ள அப்பா, என்றும்
ஆகுகநின் னுளப்படியே அடிய னேற்கே.

**George Matheson**



நூலகம்

## "WHEN I SURVEY THE WONDROUS CROSS"

### சிலுவைக் காட்சி

பண்: திருநேரிசை

1. மாண்பெலாம் வாய்ந்த நம்பி வதைபடு சிலுவை தன்னை
வீணன்யான் காணுங் காலை வியப்புறு கின்ற துள்ளம்;
நீணிலந் தனில்யான் பெற்ற நேரில்ஊ தியமும் நட்டம்,
பேணிய கருவம் எல்லாம் பித்தென இகழ்கின் றேனே.

2. கடவுள்தன் அடியான் ஏசு சிலுவையைப் போல வேறோர்
உடைமையைப் பெரிதென் றெண்ணும் உன்மத்தம் எனக்கு
[வேண்டா;
உடலினின் றுகுவெஞ் செந்நீர் உளந்தனில் எண்ணுந் தோறும்
புடவியில் மருட்டும் எல்லாப் பொய்மையுந் துறப்பேன் யானே.

3. என்குரு தலைகை கால்நின் றியல்பொடு துயரும் அன்பும்
மன்னியே கலந்து பாயும் மாட்சியைக் காணாய், நெஞ்சே;
முன்னொரு பொழுதிவ் வாறு கலந்தவோ துயரும் அன்பும்?
பின்னின துண்டோ முள்ளால்—பெறலரும் மௌலி தானே.

4. எண்ணிலா உலகம் யாவும் என்பொரு ளாயின், இந்த
மண்ணொடு புவனம் எல்லாம் வழங்கினும் கைம்மா றாமோ?
அண்ணல்தன் அன்பு தேவன் அன்பன்றோ? இதற்கென் னாவி,
நண்ணும்என் பொருள், வாழ் நாளும் நான்தரல் கடமை
[தானே.

**Isaac Watts**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * FATHER, SOURCE OF ALL MY LIFE

( *Adapted from " Jesus, Lover of my Soul* )

என்னுயிருக்குயிரே

பண் : திருத்தாண்டகம்

1. என்னுயிருக் குயிரே,என் இறையே, எந்தாய்,
யான்பறந்து சரண்புகுவேன் உன்னெஞ் சுள்ளே;
மின்னல்இடி காற்றுமழை விடாது பெய்ய
விரிபுனலும் திரண்டுவெள்ளம் பாயுங் காலை,
என்னைஉய்யக் கொண்டவள்ளால், என்னைக் காவாய்
எழிலாரும் நின்னிதயத் துள்ளே வைத்தே
துன்னுபுயல் விடுமட்டும்; பின்னர், ஐயா,
துறைஅடைவித் தேற்றருள்என் னுயிரை நீயே.

2. வேறுபுகல் இல்லேன்;ஓர் துணையும் இல்லா
வினையேன்என் உயிர்தூங்கு கின்ற துன்மேல்;
ஆறுதல்தே றுதல்என்றும் அருள்வாய் நீயே,
அடியேனைக் கைவிடேஎல், விடேல்நீ சற்றும்;
வேறறிறேன், உன்றனையே முழுதும் நம்பி
வேண்டுதுணை எலாம்நின்பாற் பெறுகின் றேன்யான்,
மாறுபகை காப்பிலென்றன் தலைகொய் யாமல்
மன்னியநின் சிறகினால் மூடு நீயே.

3. வேண்டுவன்யான் உன்றனையே; வேண்டேன் வேறு;
வேண்டுவன மிகைதமையும் உன்னிற் கண்டேன்;
ஆண்டவனே, விழுந்துமிக அயர்வுற் றேன்யான்,
அடியன்எனைக் கைதூக்கித் தேற்று; நோயில்



ஈண்டுழல்வேன், என்னோய்தீர்; குருடன் என்னை
எற்றவழி தனில்நடத்தாய் எம்பி ரானே;
நீண்டபெரும் பவமெல்லாம் உருவாய் வந்த
நீசன்யான்; தனிஅறமும் அன்பும் நீயே.

4. அருள்ஆழி அறக்கடல்நீ; பாவம் எல்லாம்
அகற்றஅருள் உள்ளாய்நீ; அடியேன் நெஞ்சைக்
கருணைவெள்ளங் கொடுகழுவி நோய்கள் தீர்த்துக்
காத்தருள்வாய், கறைபின்பு சேரா வண்ணம்:
பெருகும்உயிர் சுரக்கின்ற ஊற்றே, உன்னீர்
பருகிஉயிர் பெருகஎனக் கருளு கண்டாய்,
அருள்ஊற்றே என்னெஞ்சில் ஊறி ஊறி
அனவரதம் வளரஅருள் வேண்டி னேனே.

Charles Wesley

## * " JUST AS I AM—WITHOUT ONE PLEA "

( *Adapted* )

வந்தேன் கடையனேன் உள்ளவாறே

பண் : திருநேரிசை

1. கடைக்கணித் தடியேன் என்னைக் காத்தருள் புரியு மாறு
புடவியில் மீண்டுமீண்டும் அழைத்தனை புன்மை யேனை;
மடமையேன் உன்பால் நண்ண மற்றொரு நியாயம் இல்லேன்;
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

2. விடம்எனும் பவநோய் ஆர்ந்த நெஞ்சினேன், வினையேன், [வெய்ய
விடந்தனிற் சிறிது தானே தீர்ந்தபின், விமலா, உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவன்யான் என்று நில்லேன்; அரியநோய் தீர்ப்பாய் நீயே;
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

3. திடம்இலா எனது நெஞ்சில் சிந்தனை ஐயம் அச்சம்
கடல்அலை போல முன்னும் பின்னுமே கடுகி வாட்டும்:
படையுடன் பொரும்போர் போலப் பாழ்உளந் தனிற்போ [ரேனும்
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

4. உடைமையென் றொன்றும் இல்லேன், உறுகணேன், [பார்வை யில்லேன்;
உடைமைகள் பார்வை என்றன் உளந்தனிற் சுகமும் வேறு
புடவியில் பரத்தில் வேண்டும் பொருள்எலாம் உன்னிற் [காண்பான்
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

5. உடையவா, உன்றன் சொல்லை உறுதியென் றுன்னை நம்பி
அடையும்உன் பிள்ளை என்னை ஆதரித் தணைத்தென் பொல்லா
நடையெலாம் பொறுத்து, நெஞ்சம் நன்குறக் கழுவித் தீர்ப் [பாய்;
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ளவாறே.

6. தடைஎலாம் போயிற் றச்சோ! தன்னிகர் நினதன் பாலே,
இடையறா அன்பு நின்பால் எழஎழ நினக்கே என்றும்
உடையவா, தந்தேன் என்னை; உனதிணை அடியே சார்ந்தேன்;
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

7. கடையில்உன் அன்பின் நீளம் கவின்பெறும் அகலம் ஆழம்
தொடலரும் உயரம் யாவும் தொல்லுல கிதனிற் சின்னாள்
சடந்தனிற் காண்பான் பின்னே தகைபெறு வானிற் [காண்பான்
கடவுளே, அப்பா, வந்தேன் கடையனேன் உள்ள வாறே.

**Charlotte Elliott**



## "GATHER US IN, THOU THAT FILLEST ALL"

### கப்பல் பல, துறை ஒன்று

தரவுகொச்சகக்கலிப்பா

1. எல்லாம் நிறையும்அன்பே, எம்மைஉள்ளே சேர்த்தருள்,எம்
எல்லாப் பொருமதமும் உன்கிடையி லேசேர்க்க;
சொல்லாருங் கோயில்களிற் சன்னிதிமுன் தாங்குதிரை
எல்லாம் அறு;முன்னைப் பழம்பொருள்நீ எனக்காண்பேம்.

2. எம்மைஉள்ளே சேர்த்தருளாய்: வெவ்வேறு பெயர்சொல்லி
அம்மையப்பா உன்றனையே அழைக்கின்றேம் அனைவேமும்;
மம்மர்வினை உருப்பலவே யா'னும்உயிர்க் குயிர்நீயே:
செம்மையுள கப்பல்பல, செல்வனஓர் துறைதனக்கே.

3. இந்திரசா பத்திலுள்ள எழுநிறத்துள் ஒவ்வொன்றை
மந்தர் எழுவர்கண்டு மற்றதுவே வில்லென்றால்
இந்திரவில் லாமோ? இவர்போன்றேம் யாமும்ஐயோ!
இந்திரவில் கண்டார் எழுநிறமுங் கண்டவரே.

4. நலம்உறுநா வலந்தீவு நாடும்இரா சியம்நினதே,
இலகுபர சிகர்கள்தாம் ஏத்துகதிர் ஒளிநினதே.
புலன்அவிக்கப் புத்தர்கள்தாம் தேடுகின்ற சாந்தியும்நீ,
உலகுபுகழ் சீனர்களுக் காண்பதுவும் உன்றனையே.

5. செருக்குநிறை உரமருக்குச் செருக்கில்லா வலிஉனதே,
தருக்குநிறை கிரிகிரியர்க்குத் தனிஉவகை தான்உனதே,
பெருகுகுல ஊதருக்குத் தருமமும்நீ, அன்பும்நீ—
முருகவிழ்க்கும் அறமும்நீ மூதாழி அருளும்நீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வான்உளநல் லப்பனையே நாடுகின்றார் மாந்தர்சிலர்;
மானிடரூ பத்தின்மேல் மனங்கொண்டார் மாந்தர்சிலர்;
நானிலம்சூழ் கடல்போல உயிர்போல விரிஆவி
தானான தனிமுதலைத் தேடுவார் மாந்தர்சிலர்.

7. அம்மையப்பா, யாம்தேடும் பொருள்தனிலும் பெரியாய்நீ
எம்மையெல்லாம் நின்கிடையுள், எம்பெருமான், சேர்த்தரு
எம்மதமும் எந்நாடும் எக்குலமும் ஒன்றாக [ளாய்
எம்மைஉள்ளே சேர்த்தருளாய் எல்லார்க்கும் முழுமுதலே

மம்மர்—மயக்கம்   பலவேயா'னும்-பலவேயாயினும்
இந்திரசாபம்-வானவில்.   இராசியம்—இரகசியம்.

George Matheson.

## "ABIDE WITH ME; FAST FALLS THE EVENTIDE"

### என்னோடு வைகு நீயே

பண் : திருத்தாண்டகம்

5. அந்தோ!வந் தணுகினது மாலை வேளை;
அடியனொடு வைகுகநீ, நீங்கேல் என்னை;
அந்தியிருள் செறிந்தென்னைச் சூழா நின்ற
தாண்டவனே அடியனொடு வைகு வாய்நீ:
சந்ததமும் நம்பினஎன் துணைவர் எல்லாம்
துணையலராய், சுகமெல்லாந் தவிருங் காலை
அந்தரித்தார்க் குறுதுணையே, அப்பா, என்னை
ஆதரிக்க என்னோடு வைகு நீயே.

2. ஆயுளொரு சிறுபகல்தான் கழிய இன்னும்
ஈங்குள்ள நாழிகைதான் அரையோ காலோ?



தேய்கின்ற பூலோக மகிழ்ச்சி எல்லாம்,
செல்கின்ற இதன்மகிமை ஒருங்குசேர்ந்தே;
மாயமிவை மாயமிவை காண்கின் றேன்யான்
மாறுதலும் நாசமுமே எவற்றின் கண்ணும்!
தேய்வில்லாய், திரிபில்லாய், தோன்ற லில்லாய்,
சிறியேன்யான், என்னோடு வைகு நீயே.

3. கடைக்கண்ணாற் கணப்பொழுது நோக்கு வேண்டேன்,
கடந்தெனைநீ போகையிலோர் வாக்கு வேண்டேன்,
அடைவுடனீ சின்னாள்வந் திருந்து பின்னர்
அடியேனைத் தனியிருத்தி அகலல் வேண்டேன்,
உடையவனே, உன்னடியார் தம்மோ டென்றும்
உறைவதுபோல், சுதந்திரனாய்ப் பொறுமை யோடும்
இடைமறைவொன் றில்லாமல் எளியே னோடே
ஏழையென இகழாது வைகு நீயே.

4. அரசர்களுக் கரசெனநீ வரற்க; வந்தால்
அஞ்சுவன்யான் உன்கோர ரூபங் கண்டே;
அரசுகுடி நல்கூர்ந்தார் செல்வர் யார்க்கும்
அருளுருவன் மருத்துவன்நற் சாந்த சீலன்
நரர்துயரங் கண்டுகணீர் சிந்து வான்இந்
நானிலத்து வேண்டுவன நல்கு நெஞ்சன்
பருவரல்சேர் பாவிகட்கு நண்ப னாகும்
படிவமுடன் வந்தென்பால் வைகு நீயே.

5. நிகழ்ந்துசெலும் ஓரைதொறும் என்னோ டப்பா
நீயிருத்தல் இன்றியமை யாது கண்டேன்:
அகந்தனிற்போ ராட்டமெலாம் வெல்வான் உன்றன்
அருளன்றி வேறொன்றால் ஆவ துண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகந்தனிலே வழிகாட்டி நின்போல் வேறு
    தாமுளரோ ? தாங்குவார் யாரும் இல்லை ;
ககனமிசை முகில்வந்து மூடு போதும்
    கவிமின்னொளிசூழ் போதும்என்பால் வைகு நீயே.

6. என்னைஆ சீர்வதிக்க மருங்கில், ஈசா,
    இருக்கையில்நீ எவர்பகைவர் தமையும் அஞ்சேன் ;
இன்னலிலை என்செய்யும் ? கண்ணீர் சோர
    யாதொன்று நேரிடினும் அகங்கய் யாது ;
என்னே!உன் கூரெங்கே, சாவே, சொல்லாய் ?
    எங்கொழிந்து போயினதுன் கொற்ற மெல்லாம் ?
மன்னியசீர் வென்றியெலாம் எனதே யன்றோ,
    மாதேவா, என்னொடுநீ வைகும் போதே.

7. ஆவிபிரி யும்போதென் கண்கள் மூடும்
    அக்கணத்துன் மெய்க்கோலத் தோடு தோன்றி
மேவுமிருள் தனில்என்முன் விளங்கு வாய்நீ,
    மேலுலகந் தனையெனக்குக் காட்டு வாய்நீ,
பூவுலகின் பொய்ந்நீழல் ஓடும், ஆங்கே
    பொன்னுலகின் காலையது தொடங்கும் ; அச்சோ !
சாவினிலும் வாழ்வினிலும் ஆண்ட வா,நீ
    தமியனொடு வைகுதிநீ, வைகு நீயே.

Henry Francis Lyte.

## "SUN OF MY SOUL, THOU SAVIOUR DEAR"

### என்னுயிர்க்கு ஞாயிறு

தரவுகொச்சகக்கலிப்பா

1. என்னுயிர்க்கு ஞாயிறுவே, என்னருமைக் காவலனே,
என்னருகில் நீயிருப்பின் இரவில்லை: இதுமெய்யே ;



உன்னைஉன தடியேன்யான் காணுமற் செய்வதற்கிங்
கிந்நிலத்தில் எழுமுகில்கள் வாராமல் ஒழிகவின்றே.

2. களைப்புற்ற கண்ணிமைகள் களைப்பறவே தூக்கமெனும்
நளிபனிநீர் தனில்மெல்ல அழுந்திநன வழிவதன்முன்,
'அளியுடையாய், காவலனே, அப்பா,உன் மார்பினிலே
அளியேன்என் தலைசாய்ப்ப தெந்நாளோ' என்பேனே.

3. காலைமுதல் மாலைமட்டும் கடவுள்வைகென் னோடேநீ,
ஞாலமிசை நீயின்றி நான்வாழ்தல் இயலாதே,
மாலையணு கும்போது வைகென்னோ டஞ்சுவன்யான்
காலன்வரின் நீயென்னோ டில்லாத காலத்தே.

John Keble.

## "NEARER, MY GOD, TO THEE"

### இன்னமுங் கிட்டுவன் இறைவ உன்னையே

பண் : காந்தாரம்

1. உன்னருள், கடவுளே, உள்ள தென்றனக்
கென்னினும் போதுமென் றியானி ருப்பனோ?
இன்னலே தருங்குரு சேறி யாயினும்
இன்னமுங் கிட்டுவன் இறைவ உன்னையே.

2. தன்பதி விடுத்தவன் போலத் தமியனும்
என்வழி நடுவினில், இரவில், கல்லின்மேல்
என்றலை வைப்பினும், கனவு காண்கையில்,
இன்னமுங் கிட்டுவன் இறைவ உன்னையே.

3. உன்னரு ளால்எனக் குறும்ஒவ் வொன்றுமே
என்னரும் வழியில்யான் ஏறும் ஏணிபோல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிய கணங்கள்போல், "வருக" என்னவே,
இன்னமுங் கிட்டுவன் இறைவ உன்னையே.

4. துன்னிருள் தொலைந்திடத் துயிலி னின்றெழுந்
துன்னிசை பரவுமென் ஒளிகொள் எண்ணத்தோ
டென்னுறும் இடர்களும் உன்கண் உய்க்கவே,
இன்னமுங் கிட்டுவன் இறைய உன்னையே.

5. என்னுளம் மகிழ்வெனும் இறகர் கொண்டுவான்
தன்னையூ டறுத்துமீன் திங்கள் ஞாயிறு
பின்னிட மீமிசைப் பறந்தும் பாடுவன்:
"இன்னமுங் கிட்டுவன் இறைவ உன்னையே."

Sarah Fuller Adams
(*nee* Flower)

## "TAKE MY LIFE AND LET IT BE"
### ஆன்ம சரீர நிவேதனம்
பராபரக்கண்ணி

1. உன்னருளிவ் வாறென் றுலகறிய நான்வாழ
என்னுயுள் எல்லாம் கொடுத்தேன் பராபரமே.
2. கணம்நிமிஷம் ஓரைபகல் கங்குல்திங்கள் ஆண்டு
வணங்கிஉனை என்வாயால் வாழ்த்தும் பராபரமே.
3. கைஇரண்டும் உன்னருளாற் கைங்கரியஞ் செய்வதற்கே
ஐயா கொடுத்தேன் அரசே பராபரமே.
4. நின்னருள்இவ் வாறென்று நீணிலத்தார்க் கோதுவதற்
கென்னடிகள் எத்திசையும் ஏகும் பராபரமே.
5. ஏழிசையால் என்கண்டம் எப்போதும் உன்னிசையே
வாழி,என்றன் மன்னவனே பாடும் பராபரமே.



6. உன்தூ தெவர்க்கும் உரைக்க எனஇதழ்நா
நன்று நிரப்பியருள் நாதா பராபரமே.
7. பொன்வெள்ளி நிக்கல்செம்போ டுள்ள பொருளெவையும்
நின்பணிக்கே தந்தேன்என் நேசா பராபரமே.
8 ஒண்மை அறிவுநினை வுற்ற கருவியெல்லாம்
அண்ணல்பணிக் குத்தந்தேன் ஐயா பராபரமே.
9. என்கருத்தெல் லாம்ஒழித்தேன் எம்பெருமான் உன்கருத்
என்கருத்தென் றெண்ணப் படித்தேன் பராபரமே. [தே
10. என்னெஞ் சனக்குத் திருக்கோயி லென்றுதந்தேன்
என்கடவுள் நீஇங் கிருப்பாய் பராபரமே.
11. என்னிடத்தில் உள்ளவற்றில் இல்லையொன்றும் அன்பது
அன்னதெலாம் உன்றனக்கே ஐயா பராபரமே. [போல்
12. இன்றுமுதல் எப்பொழுதும் என்னைமுற்றும் உன்றனக்கே
நன்றுதந்தேன் நான்உய்ந்தேன் வாழ்ந்தேன் பராபரமே.

Frances Ridley Havergal.

## "O STAR OF TRUTH, DOWN SHINING"
### மெய்ம்மைமீன்
பண்: திருத்தாண்டகம்

1. வான்இலங்கி ஐயம்அச்ச முகில்களூடே,
வையகமும் விளங்குகின்ற மெய்ம்மை மீனே,
நான்உன்னை வேண்டுகின்றேன் ஒன்று கேள்நீ:
நானிலத்தில் என்வழியை விளக்கு கண்டாய்;
ஆனபய ணத்துநெறி நீண்ட தேனும்,
அந்நெறியிற் படும்பாடு பலஉண் டேனும்,
யான்வழியே தனிநடந்து களைப்பே னேனும்
என்முன்னே நீசெல்லு, தொடர்வேன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்நெறியே பழையநெறி, இதிலே செல்லென்
றெனைமருட்டு நெறிகள்பல எதிர்வந் தாலும்,
மின்னுகின்ற மீனேஎன் விளக்கம்; எற்கு
மெய்வழியே காட்டும்,பொய் வழிகாட் டாது;
முன்னொருவர் போகாத சுரமே யேனும்,
முந்நீரிற் குறியில்லா நெறியே யேனும்,
என்வழியே தனிநடந்து களைப்பே னேனும்,
என்முன்னே நீசெல்லு, தொடர்வேன் யானே.

3. அருளறியார் கொன்றதிருத் தொண்டர் பாதம்
அரியஉன்றன் வழிதோய்ந்து செந்நீர் பாய்ந்த;
நரர்கோபம் எனும்பெரிய தீக்குன் றங்கள்
நம்பனடி சேரும்வழி விளங்கக் காட்டும்;
ஒருமீனே, உன்கதிர்கள் யான்காண் கிற்பின்
ஒருகால்என் அடிசோர்ந்து தளர்வுற் றாலும்,
இருநிலத்தே தனிநடந்து களைப்பே னேனும்,
என்முன்னே நீசெல்லு, தொடர்வேன் யானே.

4. என்பால்அன் புள்ளார்கள் எனைநீத் தாலும்;
இருகண்ணி னீர்சொரிய அழைப்ப ரேனும்;
வன்பால்என் பகைவர்குழாம் காய்ந்து சீறி
மனத்தின்கண் அச்சுறுத்த முயல்வ ரேனும்;
மன்னும்உயர் மெய்ம்மைக்குக் குடிநான் என்ற
வார்த்தைதவ றாமலியான் காத்தல் வேண்டும்,
எந்நாளும், வாழ்ந்தாலும், சாவுற் றாலும்,
என்முன்னே நீசெல்லு, தொடர்வேன் யானே.

**Minot Judson Savage**



## "DEAR LORD AND FATHER OF MANKIND"

### நரரெவர்க்கும் அப்பனே

பண் : திருத்தாண்டகம்

1. நரரெவர்க்கும் அப்பனே, நம்பா, நாதா,
நாங்கள்வினை செயும்வழிகள் தம்முள் எல்லாம்
பரபரப்பும் பதற்றமுமே அந்தோ அந்தோ!
பரமபிதா பொறுத்தருளல் வேண்டும் நீயே.
கரவின்றி உள்ளத்தைச் செவ்வி தாக்கி,
கருத்தெல்லாந் திருத்திஎமைக் கடவுள் காப்பாய்,
பரவுவேம் நெஞ்சார நின்னை நாங்கள்,
படிறின்றி நின்தொண்டு செய்வோம் யாமே.

2. மாந்தர்எம துள்ளத்தில் நிகழும் போர்கள்
நிகழாமல் மனம்அமைதி அடையு மட்டும்
சாந்தமே நினதுபனித் திவலை எங்கள்
நெஞ்சமாந் தரைமீது பொழிநீ ஐயா;
ஏந்தலே, எங்கள்மனப் பாடு பாரம்
யார்தீர்க்க வல்லார்காண் நின்னை யன்றி?
போந்தநின்றன் சாந்திஎங்கள் நேராம் வாழ்க்கை
தனிற்காணும் போதுநினைப் போற்று வாரே.

3. ஆசையெனுந் தீசுட்ட உள்ளம் ஆற
அருளாம்நின் தண்மையெனும் எண்ணெய் பூசின்
பேசுபுலன் பேசாமல் அடங்கும் எல்லாம்,
பின்போகும் மாமிசம்தன் சேட்டை நீங்கி;
நாசஞ்செய் பூகம்பம் அங்கி சூறா
வளிநடுவில் இருந்தொருசொல் வழங்கு கண்டாய்
மாசுமறு இல்லாத அமைதி பூண்ட
நடுங்காத மன்னுசிறு குரலே அச்சோ.

**John Greenleaf Whittier**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "I KNOW NOT WHAT AWAITS ME"

### எனக்கினி வருவதேதோ

பண் : திருநேரிசை

1. எனக்கினி வருவ தேதோ! யான்சிறி தறிய கில்லேன்,
முனைவன்என் கண்ணி ரண்டும் மூடினா னருளி னாலே;
எனக்குமுன் பாதை தன்னில் எடுத்தடி வைக்குந் தோறும்
மனக்கினி தளிக்குங் காட்சி வருவதால்! ஈசன் செய்கை!

2. எம்பிரான் எனக்கு நல்கும் இனியநல் லுவகை யொன்றும்
இம்பர்நான் கனவி லேனுங் கண்டதே இல்லை, அச்சோ!
அம்புவி வழியில் என்முன் அடியொன்றே காண்கின்
[றேனால்,
தம்பிரான் காட்டும் இந்த அடியொன்றே சாலும் நெஞ்சே.

3. மருள்களும் பொய்கள் யாவும் மாயையாய் ஒழியுங் காலை
அருளொளி வீசு கின்ற தாயிரம் மடங்கு தானே;
தெருள்நிறை மவுனம் என்றன் சிந்தையை நிரப்பும் போது
திருவொலி ஒலிப்ப தொன்று: "சிறியைநீ என்பின் வாவே."

4. நூலறி வோடு நில்லேன், அறிவிலா வாழ்வும் வாழ்வோ?
சீலன்செங் கையால் என்கை பற்றினன், அவனை விட்டு
ஞாலத்திற் போக என்னை விடுவனோ அம்மை யப்பன்?
மேலுள கவலை மாயப் பாய்கின்ற தின்ப வெள்ளம்.

5. இவ்வணம் நடக்கின் றேன்யான், எங்குநான் செல்கின்
[றேனோ,
எவ்வெவை உறுமோ, யாதும் அறிகிலேன், அறிய வேண்
[டேன்;
செவ்வொளி வேண்டேன் தேவன் என்னுட னிருக்கும்போது;
இவ்வறி வென்ன செய்யும் இறையைநான் நம்பே னாகில்.

Author Unknown



## "O PERFECT LOVE"

திருநேரிசை

1. எண்ணுக்கும் உரைக்கும் எட்டாப் பூரண அன்பே, யாங்கள்
பண்ணுமோர் வேண்டு கோள்:நீ பரிவுடன் ஒன்றாய்ச் செய்யும்
பெண்ணொடாண் கரைகா ணாத பெருங்கடல் அன்புள்
[ஆழ்ந்து
மண்ணிலுன் புகழ்நின் றோங்க "வாழ்க"என் றருளு வாயே.

2. பூரண வாழ்வே, உன்றன் பொன்னடி நாளும் நம்பி,
நேரிலா அன்பு, மாறா நிலையுள பத்தி, நெஞ்சம்
ஆரவாஞ் சித்த எல்லாம் பொறுத்தெதிர் பார்க்கை, சாந்தி,
சோர்விலா உள்ளம், சாவு துயரிவை நேர்ந்த போதும்;

3. இந்நில வாழ்வில் உண்டாம் துக்கமே இன்னல் எல்லாம்
பொன்னென மிளிரச் செய்யும் மகிழ்ச்சியும், போராட் டத்தை
மன்னிய அமைதி செய்யும் மனச்சமா தானம் ஈந்தே,
இன்றெனும் வாழ்நாள், பின்னீ எண்ணரும் பின்னை நீயே.

Dorothy F. Gurney
(*nee* Blomfield)

## "I HEARD THE BELLS ON CHRISTMAS DAY"

( *imitated* )

தரவுகொச்சகக்கலிப்பா

1. "கிறிஸ்து சயந்திஇன்று, கிறிஸ்து சயந்தியின்று,
கிறிஸ்து சயந்தி"எனக் கிறைஸ்தவர்தங் கோயில்களில்
முறையே இயம்புமணி ஒலிகேட்டேன்; குரவரெலாம்
அறையுமொழி ஒன்றுண் டதுகேட்டேன் அஞ்செவியால்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. "மண்ணுலகிற் சாந்தி; மனிதர்நெஞ்சி லன்புநிதம்;
அண்ணல் பிறந்தான் அவைவளர்க்க" என்றமொழி
எண்ணரிய கோயில்களில் இன்றுரைத்தார்; இன்றுமட்டோ?
மண்ணுலகிற் பதின்றொண்டு நூறாண்டு பாடுகின்றார்.

3. பாடும்இந்தப் பாட்டும்இதைப் பாடுகின்ற பண்ணும்உளம்
ஊடறுத்துச் சென்றே உருக்க, உளம்உருகி
ஆடவரும் அரிவையரும் கண்ணீரா றாய்ப்பெருக
ஆடுவதும் பாடுவதும் கேட்டேன், உளம்நொந்தேன்.

4. ஐயையோ ஐயையோ அவனிதனில் அன்புளதோ?
மெய்யோ சமாதானம்? மேதினியிற் சாந்தியுண்டோ?
பொய்யே இவைஎல்லாம், பொய்பொய்பொய், சுத்தப்பொய்;
வையமெலாம் சண்டைபகை மாற்சரியம் நோய்பசியே.

5. பாடுவது சாந்திஅன்பு, பண்ணுவது போர்மேற்போர்,
கூடுவது கோயிலிலே, பேசுவதெல் லாங்கனவே!
ஆடுவதும் பாடுவதும் ஆனந்தத் தோடுநின்று
தேடுவதும் விட்டுண்மை தெளிவதுவே புத்தியென்றேன்.

6. "இத்தரையிற் தீமை இருப்பனவெல் லாமறிந்தாய்,
அத்தன் ஒருவனுளன்; அறிந்தாயோ நீஅவனை?
பித்தம் பிடித்துப் பிதற்றாதே, பேதாய்நீ;
மெத்தப் படித்தவன்போல் விளம்பேல்உன் ஞானமெல்லாம்.

7. "அன்பு நிதம்பெருகும், அவனிமிசை சாந்திநிதம்
இன்பம் பெருகும், பசிமிடிநோய் போய்ஒழியும்;
துன்பந்தொலையும், தொலையுமெல்லாப் பாவமெனும்
கன்மந் தொலையும், கடவுள் அருளாலே.



8. "இதுகூற வேபிறந்தான் பதிபத்தன் ஏசு;
இதுநம்பு முற்றும்; இதைஎவர்க்கும் நீகூறு."
இதுநம்பு கின்றேன், இறைவனைப் போற்றுகின்றேன்,
பதிபத்தன் ஏசுதனைப் பாருக் களித்தவனே.

**Henry Wadsworth Longfellow**

## "PRAISE GOD FROM WHOM ALL BLESSINGS FLOW"

### போற்றுமின் ஈசனை

பண் : காந்தாரம்

போற்றுமின் நலமெலாம் பொழியும் ஈசனை,
போற்றுமின் அவனையே புவியு ளீர்எலாம்,
போற்றுமின் அவனையே பொன்னுல கத்துளீர்,
போற்றவன் அன்பினை எண்ணி நெஞ்சமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவது பிரிவு

## கடவுள் அலங்கல்

42127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுவன இவை

### பண் : திருத்தாண்டகம்

1. செய்தபிழை எல்லாம்நீ பொறுத்தல் வேண்டும்,
செய்யாமல் நின்றகடன் பொறுத்தல் வேண்டும்,
மைபோல இருண்டஉளம் கழுவல் வேண்டும்,
மறுபடியும் கெடல்இன்றி ஆளல் வேண்டும்,
மெய்யானே, ஆசைநின்கண் அருளல் வேண்டும்,
மேன்மைபெறு சுகுணமெலாம் ஈதல் வேண்டும்,
மையாருங் குழலிமரி மகனார் போற்றும்
மாதேவா, அடியனுள வாஞ்சை ஈதே.

2. செய்தபிழை எல்லாம்நீ பொறுத்த லோடு
செய்தபிழை யால்விளைந்த தீமை எல்லாம்
வையமிசை நீதானே நீக்கல் வேண்டும்,
வறியனேன் செய்யாத கடனால் நிற்கும்
வெய்யமா சுலகினின்றும் போக்கல் வேண்டும்,
மேதினியில் நீயன்றிக் காப்பா ரில்லை;
பெய்வளையாள் மரிமகனார் ஏசு போற்றும்
பெருமானே, நின்னடிகண் டுய்ந்தேன் யானே.

3. என்பால்நீ அருள்கூர்ந்த வாபோல் யானும்
எவர்பாலும் அருள்கூர வரமே வேண்டும்,
அன்பால்என் குருஏசு தொண்டு செய்த
அவ்வளமே அடியனுக்கும் அருளல் வேண்டும்,
நன்பாட்டுப் புலவர்மலி எனது நாடு
நாவலந்தீ வீழமுய்ய நான்செய் வேலை
தன்பால்உன் ஆசிமழை பொழிதல் வேண்டும்,
தையல்மரி மகன்ஏசு பரவு தேவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை ஆதரி

பண் : நட்டராகம் .

1. பொல்லா நெஞ்சினன்யான் உனைப்பூசிக்கு மாறறியேன்,
எலலாப் பாவங்களும் நிதம்செய்துவ ரும்பொழுது
நல்லாய், நாயகனே தடுத்தாண்டனை அன்றெனைநீ :
சொல்லாய் இன்றெனது துயர்நீக்குவ தார்கடனே.

2. என்னுளம் உள்ளகுறை அவையாவையும் நீஅறிவாய்,
கொன்னே ஆழ்கடலிற் றரும்பொத்துழல் கின்றனன்யான்
என்னால் ஆவதொன்றும் இலை,ஆருக உன்கருத்தென்
றன்னை ஈங்கிருந்தேன் எனைஆதரி என்னப்பனே.

## அறிவோ டாற்றல் அருளே மும்மை

பண் : நட்டபாடை ; இந்தளமும் ஆம்

அறிவேமய மானுன்தன தடியேன்குறை அறிவான்,
நிறையும்பல முழுதுஞ்செறி நிமலற்கெவை ஆகா?
குறியும்குணம் எல்லாம்அருள் வடிவான்உனைக் குறித்தான்
முறையோஇனி நெஞ்சேதுயர் முழுகித்திரி வதுவே.

## சயந்திப்பிரார்த்தனம்

பண் : பழம்பஞ்சுரம்

1. பாரில் மாந்தர்கள் உய்ந்து வாழவே பண்டு தந்தனை குரவரை:
சீரும் உண்மையும் அவர்கள் போதித்தும் தேவஉன் குணஞ்
[செவ்விதாய்



ஆரும் காட்டிலர் ஐய, அன்னரில் யாங்கள் கண்டதுஞ்
[சொற்பமே;
நேரில் உன்குணம் நன்கு காணவே நேடி நின்றதிவ் வுலகமே.

2. திங்கள் கோள்களும் மீன்கள் யாவுமே திகழ்இ ழந்துபின்
[மறையவே
இங்கெழுந்தவி ளங்குஞ் ஞாயிறு போல வந்தனன் ஏசுவே;
புங்க வன்புகல் மொழியில் செய்கையில் புகல ருந்திரு முகந்
[தனில்
எங்கள் ஈசனே, உன்னைக் கண்டனம்; நன்கு கண்டனம்
[குருசிலே.

3. மாண்ட பிள்ளைமெய் மண்ணுள் இட்டனர், மண்ண தாயது
[மடியினும்
மாண்ட நின்திரு மைந்தன் ஆருயிர் வந்து சேர்ந்ததுன்
[மருங்கினில் :
ஆண்ட வா,உவன் அடிச்சு வட்டினில் அவனி முற்றும்பின்
[செல்லவே
வேண்டு கின்றனம், வேறு வேண்டிலம், வேறு வேண்டிலம்
[எந்தையே.

## சயந்திச்சாழல்

தரவுகொச்சகக்கலிப்பா

1. என்னப்பன் எம்பெருமான் எல்லார்க்குந் தான்கடவுள்
மன்னுமுல கத்தில்வைத்த அன்பினள வென்னேடீ
மன்னுமுல கத்திலன்பு வைத்ததனால் ஈந்தானே
தன்னிகரில் ஏசுகுரு மணியையுமே சாழலோ.

2. அன்னான்றன் நன்மொழிகேட் டதன்படியே ஒழுகுபவா
மன்னும்ஒழி யாவாழ்வு பெற்றுய்வார் காணேடீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னும்ஒழி யாவாழ்வு மனிதரெலாம் பெறும்பொழுது
பொன்னுலகம் போலாகும் பூலோகம் சாழலோ.

3. வான்போல மாறுதற்கு மண்ணுலகம் சூசையர்க்கு
மான்பழித்த நோக்கிமரி வயினுதித்தான் காணேடீ
மான்பழித்த நோக்கிமரி வயினுதித்த வள்ளலவன்
யான்பழிச்சும் இலக்காணன் யாவர்க்கும் சாழலோ.

4. படைப்பவன்றான் மனிதர்களைத் தனதுருவிற் படைப்பதினால்
கடவுளுரு நாமடைதல் கடனாகும் காணேடீ
கடவுளுரு மானிடர்யாம் காசினியில் அடையுநெறி
சுடரொளியாம் ஏசுகுரு சுசரிதங்காண் சாழலோ.

5. ஏசுகுரு கடவுள்திரு வடியிணையே எந்நாளும்
பூசைபுரிந் தவனருளாற் புண்ணியனா னேனேடீ
பூசைபுரிந் தவனருளாற் புண்ணியர்நாம் ஆதற்கே
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## பலசமயம் பரனொருவன்

### பண் : தக்கராகம்

1. நாவரசர் சம்பந்தர் சுந்தரர்மா ணிக்க
வாசகர்முன் பூசைசெய்த நம்பனொரு சிவனே,
பாவரசர் திருமங்கை சடகோபர் முதலாம்
பாகவதர் பணிகொண்ட அச்சுதனே மாலே,
தேவடியார் ஆமோசு மீகாஏ சாயா
தேசிகர்தம் உளம்வாழும் ஏகோவா மூர்த்தீ,
சாவாத புகழுடையார் ஏசுகுரு நாதர்
தம்முகத்தில் இலங்கும்எந்தாய் என்கடவுள் நீயே.



2. உலகியலைக் கரைகண்ட சரதுஸ்தர் சொன்ன
ஒளியாகும் அகுரனைநான் வணங்கிநிதம் துதிப்பேன்,
நிலையில்லா வாழ்விதனை நிலையுளதென் றெண்ணும்
நினைவின்றிக் கோதமர்போல் நிருவாணம் அடைவேன்,
நலமெல்லாம் போதிக்கும் நபிமாருள் முகம்மத்
நபிபோல அல்லாவை நாடோறும் தொழுவேன்
பலசமயம் பலவழிகள் பரன்ஒருவன் என்ற
முனிராம மோகனரைப் பார்த்துவழி முயல்வேன்.

3. கால்வாசி அரைவாசி அரையரைக்கால் முக்கால்
கண்டவரே யன்றிமுற்றும் கண்டவர்கள் இல்லை;
கால்வாசி மாகாணி காணிஅரைக் காணி
காணுதார் தாம்முற்றுங் கண்டவர்போல் நடிப்பார்;
நூல்வாசிப் பேன்என்றும்; நூலறிந்தார் எனக்கு
நுவலுமொழி ஆராய்ந்து சிந்திக்கக் கடவேன்:
கால்வாசி கண்டவுடன் யான்என்னுஞ் செருக்கில்
கடையேன்யான் வீழாது காத்தருள்நீ தேவே.

## தன்னைத்தான் தரல்

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

மண்ணூர்க்கும் விண்ணவர்க்கும் வாழ்வருளும் வாழ்வே,
மடந்தையர்க்கும் குழந்தையர்க்கும் மாண்பளிக்கும் மாண்பே,
எண்ணூர்க்கும் எண்ணினர்க்கும் எழில்அருளும் எழிலே,
இரவார்க்கும் இரவலர்க்கும் இரவகற்றும் பொருளே,
உண்ணூர்க்கும் உண்பவர்க்கும் உணவருளும் உணவே,
உற்றூர்க்கும் அற்றவர்க்கும் உடன்இருக்கும் உறவே,
நண்ணுத அருள்நாடும் ஏசுநம்புந் தேவே,
நான்என்னை உன்னடிக்கே நல்கினன்கொண் டருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெற்சமனைத்தோட்டம்

பண் : குறிஞ்சி

கங்குலில் யாமத்தில் காவினிற் சென்றே
காதகர் சூழ்வினை தன்னை நினைந்தே
பொங்குறு வேதனை பாரமாய் வீழ்த்த,
புண்ணியன் தந்தையின் பொன்னடி வீழ்ந்தே,
அங்கம்அ டங்கலும் வேர்வையில் மூழ்க,
“ அப்ப,இப் பாத்திரம் நீக்குக கோனே,
துங்க,உன் சித்தமே ஆகுக ” என்றே
சோர்வினை வென்றநல் ஏசுஎன் வழியே.

# மூவது பிரிவு

1. திருமுறை
2. திருமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

### அப்பர்

### திருக்குறுந்தொகை

1. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணைஅடி நீழலே.

2. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை,
சூழ்த்த பாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

3. விறகிற் றீயினன், பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்,
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய,முன் னிற்குமே.

### பண் : காந்தார பஞ்சமம்

1. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நாதன் நாமமே.

### திருத்தாண்டகம்

1. அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாய் என்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ எனையாண்ட செல்வன் நீயே.

2 ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே?
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே?
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே?
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே?
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே?
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே?
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே?
காண்பார்ஆர் கடவுள்நீ காட்டாக் காலே?

3 நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்;
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்;
மன்னானாய், மன்னவர்க்கோர் அமுத மானாய்;
மாநிலத்தில் எல்லாக்கும் வாழ்வு மானாய்;
பொன்னானாய், மணியானாய், போக மானாய்,
பூமிமேற் புகழ்தக்க பொருளே, உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே!

4. குலம்பொல்லேன், குணம்பொல்லேன், குறியும் பொல்
குற்றமே பெரிதுடையேன், கோல மாய [லேன்,
நலம்பொல்லேன், நான்பொல்லேன், ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன், நடுவே நின்ற
விலங்கல்லேன், விலங்கல்லா தொழிந்தே னல்லேன்,
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேச வல்லேன்,
இலம்பொல்லேன், இரப்பதல்லால் ஈய மாட்டேன்,
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே!



பண் : திருநேரிசை

1. நீதியால் வாழ மாட்டேன், நித்தலும் தூயேன் அல்லேன்,
ஓதியும் உணர மாட்டேன், உன்னைஉள் வைக்க மாட்டேன்,
சோதியே சுடரே உன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே அலைந்து போனேன் என்னைஆள் உடைய கோவே!

2. உறுகயி றூசல் போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவும் நெஞ்சம்:
பெறுகயி றூசல் போலப் பிரபுவே உன்றன் பாதத்
தறுகயி றூச லானேன் என்னைஆள் உடைய கோவே.

3. நம்பனே கடவு ளேஎன் நாதனே ஆதி மூர்த்தி
பங்கனே பரம யோகி என்றென்றே பரவி நாளும்
செம்பொனே பவளக் குன்றே திகழ்மலர்ப் பாதங் காண்பான்
அன்பனே அலைந்து போனேன் என்னைஆள் உடைய கோவே

4. ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்
காம்பிலா மூழை போல, கருதிற்றே முகக்க மாட்டேன்: [து,
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒருத்தனே எங்கள் கோவே.

5. மனமெனுந் தோணி பற்றி, மதியெனுங் கோலை ஊன்றி,
சினமெனுஞ் சரக்கை ஏற்றி, செறிகட லோடும் போது;
மதனெனும் பாறை தாக்கி, மறியும்போ தறிய வொண்ணா
துனைஉனும் உணர்வை நல்காய் ஒருத்தனே எங்கள் கோவே.

6. உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடவுள்நம் அன்னைஅப்பன் கழலடி காண லாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி கடவு ளாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டி,
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

பண் : திருக்குறுந்தொகை

1. என்னி லாரும் எனக்கினி யாரில்லை,
என்னி லும்மினி யானொரு வன்னுளன்;
என்னு ளேஉயிர்ப் பாய்,புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் எந்தைஎன் ஈசனே.

2. ஞானத் தார்தொழு வார்சிலர் ஞானிகள்,
ஞானத் தாற்தொழு வேன்உனை நானலேன்,
ஞானத் தாற்தொழு வார்கள்தொ ழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும்தொ ழுவனே.

3. மனிதர் காள்இங்கே வம்மொன்று சொல்லுவேன்,
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன் பொற்கழல் ஈசன்எ னுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.

4. என்னை ஏதும் அறிந்திலன், எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும்அ றிந்திலேன்;
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென்ற றிந்தேனே.



சம்பந்தர்

பண் : கௌசிகம்

1. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயதெல் லாம்;அவன் நாமமே
சூழ்க; வையக மும்துயர் தீர்கவே.

2. காத லாகிக்க சிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் ஆகமம் நாமறி யாதது
நாதன் நம்பன்என் தந்தைதன் நாமமே.

பண் : குறிஞ்சி

3. சித்தந் தெளிவீர்காள்,
அத்தன் நற்றாளில்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே.

4. துன்பந் துடைப்பீர்காள்,
நம்பன் நற்றாளில்
அன்பு மலர்தூவ
இன்பம் ஆகுமே.

சுந்தரர்

பண் : பழம்பஞ்சுரம்

1. தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே, எந்தை
புகழே பாடுமின் புலவிர்காள்:
இம்மை யேதரும் சோறுங் கூறையும்,
ஏத்த லாம்,இடர் கெடலுமாம்;
அம்மை யேபர லோக வாழ்வினுக்
கியாதும் ஐயுற வில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண் : நட்டபாடை

2. வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்,
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்,
தாழாதறம் செய்ம்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரம் எனீரே.

இதுவரைப் படித்த அதே பதிகத்தைப் பின்னால் மீண்டும் சரியாகப் படிக்க வேண்டும்.

2. தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ:
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

---

3. ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே;
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா! தோணோக்கம் ஆடாமோ?

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

1. தந்ததுன் றன்னை, கொண்டதென் றன்னை, சாற்றுநீ ஆர்கொ
[லோ சதுரர்;
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன், யாதுநீ பெற்றதொன்
[றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான், தேவருங் காணுதற்
[கரியாய்
எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய்; யானிதற் கிலனொர்கைம்
[மாறே.

2. பானினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த செல்வமே செம்பெரு
[மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந் தருளுவ
தினியே.

### கொச்சகக்கலிப்பா

உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்றாரை யான்வேண்டேன், கற்பனவும் இனியமையும்;
மற்றாருந் நிகரில்லா மன்னுநின் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

---



முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை,
பத்திநெறி அறிவித்து, பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து, சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே!

## பட்டினத்தார்

### கட்டளைக்கலித்துறை

1. பொல்லா தவன்,நெறி நில்லா தவன்,ஐம் புலன்கள் தமை
வெல்லா தவன்,கல்வி கல்லா தவன்,மெய் யடியவர்பாற்
செல்லா தவன்,உண்மை சொல்லா தவன்,நின் திருவடிக்கன்
பில்லா தவன்,மண்ணி லேன்பிறந் தேன்என் இறையவனே?

2. ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்தாள் சதம்என் இறையவனே.

3. தாயும் பகை,கொண்ட பெண்டீர் பெரும்பகை, தன்னுடைய
சேயும் பகை,உற வோரும் பகை,இச் செகமும்பகை,
ஆயும் பொழுதில் அருஞ்செல்வம் நீங்கில்இங் காதலினால்
தோயுநெஞ் சேஉன தீசர்பொற் பாதம் சுதந்தரமே.

4. காடோ செடியோ கடற்புற மோகன மேமிகுந்த .
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேன்உடல் வீழுமிடம்?
தேடும் அடியவர்க் கேசாதுணை உன்றன் சீர்ப்பதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. செல்வரைப் பின்சென்று, சங்கடம் பேசி, தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமல், பரானந்தத்தின்
எல்லையிற் புக்கிட ஏகாந்த மாய்எனக் காமிடத்தே
அல்லலற் றென்றிருப் பேன்அத் தனேஎன் அரும்பொருளே.

6. மந்திக் குருளையொத் தேனில்லை ; நாயேன் வழக்கறிந்தும்
சிந்திக்குஞ் சிந்தையை யான்என்செய் வேன்?எனைத் தீதகற்றி,
புந்திப் பரிவிற் குருளையை ஏந்திய பூசையைப்போல்
எந்தைக் குரியவன் காண்அத்த னேஎன் இறையவனே.

7. கையொன்று செய்ய, விழியொன்று நாட, கருத்தொன்றெண்ண,
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேச, புலால்கமழும்
மெய்யொன்று சார, செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே?

8. மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயில்மட்டே,
இனமான சுற்றம் மயானமட் டே,வழிக் கேதுதுணை ?
தினையா மளவெள் ளளவா கினும்இங்கு செய்ததவம்
தனைஆள என்றும் பரலோகஞ் சித்திக்கும் ; சத்தியமே.

9. அத்தமும் வாழ்வும் அகத்துமட் டே,விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டே,விம்மி விம்மிஇரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே ;
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே.

10. ஒன்றென் றிரு,தெய்வம் உண்டென் றிரு,உயர் செல்வமெல்லாம்
அன்றென் றிரு,பசித் தோர்முகம் பார்,நல் லறமும்நட்பும்
நன்றென் றிரு,நடு நீங்கா மலேநமக் கிட்டபடி
என்றென் றிரு;மன மேஉனக் கேஉப தேசமிதே.



11. என்பெற்ற தாயரும் என்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்;
பொன்பெற்ற மாதரும் போமென்று சொல்லிப் புலம்பிவிட்டார்;
கொன்பெற்ற மைந்தரும் செய்கடன் செய்து திரும்பிவிட்டார்;
உன்பற் றொழிய ஒருபற்றும் இல்லை உடையவனே.

12. சொல்லால் வருங்குற்றம், சிந்தனை யால்வருந் தோடம்,செய்த
பொல்லாத தீவினை, பார்வையிற் பாவங்கள், புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள், ஆயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாயென் இறையவனே.

13. நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோ?அக மும்பொருளும்
இல்லாளும் மைந்தரும் சுற்றமும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஅறிந் தேன்என் இறையவனே.

## வெண்பா

1. ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா ; மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

2. எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம்இருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

3. காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்
தற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
பற்றுயோ ஈசன் பதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர்

### பராபரக்கண்ணி

1. சிந்தித்த எல்லாம்என் சிந்தைஅறிந் தேஉதவ
வந்த கருணை மழையே பராபரமே.

2. திக்கொடுகீழ் மேலும் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.

3. அப்பாஎன் எய்ப்பில்வைப்பே ஆற்றுகிலேன் போற்றி
செப்புவதல் லால்வேறென் செய்வேன் பராபரமே? [என்று

4. பாராயோ என்னைமுகம்? பார்த்தொருகால் என்கவலை
தீராயோ? வாய்திறந்து செப்பாய் பராபரமே.

5. ஓயாதோ என்கவலை? உள்ளேஆ னந்தவெள்ளம்
பாயாதோ ஐயா? பகராய் பராபரமே.

6. கடலமுதே தேனேஎன் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே.

7. உள்ளம் அறிவாய், உழைப்பறிவாய், நான்ஏழை;
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

8. எண்ணாத எண்ணம்எல்லாம் எண்ணிஎண்ணி ஏழை
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே. [நெஞ்சம்

9. ஆறித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
பாழிற் திரிவதென்ன பாவம் பராபரமே?

10. துன்பக்கண் ணீரிற் துளைந்தேற்குன் ஆனந்த
இன்பக்கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே?

11. கண்ணாவா ரேனும்உனைக் கைகுவியா ராயின்,அந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே.

12. எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

13. எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்;
அத்தன்மை நின்னருளும் அன்றோ பராபரமே?



14. என்போல் எளியவரும் எங்கெங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே?

15. ஆரிருந்தென்? ஆர்போய்என்? ஆரமுதாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன்என் தேவே பராபரமே.

16. தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக்கொண் டென்னபலன் எந்தாய் பராபரமே?

17. நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே.

18. பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தால்
ஆவிக் குதுதுணையார் ஐயா பராபரமே?

19. பத்தர் அருந்தும் பரமசுகம் யானருந்த
எத்தனைநாட் செல்லும்? இயம்பாய் பராபரமே.

20. சொல்லுஞ் சமயநெறிச் சுற்றுக்குள் ளேசுழலும்
அல்லல் ஒழிவதென்றோ? ஐயா பராபரமே.

21. மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையால்என்
கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே.

### கலிவிருத்தம்

1. சோதி யேசுட ரேசுக மேதுணை,
நீதி யேநிச மேநிறை வேநிலை;
ஆதி யேஉனை யானடைந் தேன்,அகம்
வாதி யாதருள் வாய்அருள் வானையே.

2. இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலாம்
அரும்பச் செய்யென தன்னைஒப் பாமனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமலிங்கசுவாமிகள்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

1. பண்ணால்உன் அருட்புகழைப் பாடுகின்றார்,
 பணிகின்றார், நின்னழகைப் பார்த்துப் பார்த்து,
கண்ணார உளங்குளிரக் களித்தானந்தக்
 கண்ணீர்கொண் டாடுகின்றார், கருணை வாழ்வை
எண்ணுகின் றனைஎந்தாய் எந்தாய் எந்தாய்
 என்கின்றார் நின்னன்ப ரெல்லாம்; என்றன்
அண்ணாநா னொருபாவி வஞ்ச நெஞ்சால்
 அலைகின்றேன் என்செய்வேன்? அந்தோ அந்தோ!

2. அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
 அடியார்கள் பாடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் நால்களெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
 போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளுந் தெய்வம்
 எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் தெளிவாக்குந் தெய்வம்
 சித்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

3. வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
 மரபினில்யான் ஒருவனன்றோ வகையறியேன், இந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ?
 இதுதகுமோ? இதுமுறையோ? இதுதருமந் தானோ?
மாழைமணி உலகினுள்ள வள்ளால்யான் உனக்கு
 மகனலனோ? நீஎனக்கு வாய்த்த தந்தைஅலையோ?
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்,
 கொடுத்தருள்நின் னருளொளியை, கொடுத்தருள்இப்
 [பொழுதே.



4. உன்னைமறந் திடுவேனோ? மறப்பறியேன், மறந்தால்
 உயிர்விடுவேன் கணந்தரியேன் உரைக்கின்றேன் கேள்நீ:
என்னைமறந் திடுவாயோ? மறந்திடுவா யெனில்யான்
 என்னசெய்வேன், எங்குறுவேன், எவர்க்குரைப்பேன்?
 [எந்தாய்
அன்னையினுந் தயையுடையாய், நீமறந்தா யெனினும்
 அகிலமெலாம் அளித்திடுநின் அருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன், மறவேல்,
 இதுதருணம் அருட்சோதி எனக்குவிரைந் தருளே.

5. நான்மறந்தே னெனினுமெனைத் தான்மறவான் எனது
 நாயகனென் றுடுகின்றேன், எனினுமிது வரையும்
வான்மறந்தேன் வானவரை மறந்தேன் என்வாழ்வை
 மறத்தேன்நம் கணங்கள்தமை மறந்தேன்என் னுடைய
ஊன்மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சிஎலாம் மறந்தேன்
 உலகமெலாம் மறந்தேன்;இங் குன்னைமறந் தறியேன்;
பான்மறந்த குழவியைப்போல் பாராய்இங் கெனையே
 பரிந்துநின தருட்சோதி புரிந்துமகிழ்ந் தருளே.

6. கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
 காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
 மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
 நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவெனநில் இறையவனே பரமே
 என்னரசே யான்புகலும் இசையும்அணிந் தருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை அறியேன்
இருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலை ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ?
இருந்ததிசை சொலஅறியேன், எங்ஙனம் நான்புகுவேன்?
யார்க்குரைப்பேன், என்னசெய்வேன்? ஏதுமறிந் திலனே.

8. சாதிமதம் சமயமெனுஞ் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதியந்த நிலைஅறியேன் அலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்
நீதிநெறி நடந்தறியேன், சோதிமணிச் சபையில்
நிருத்தியஞ்செய் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனோ?
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்? [திலனே.
யார்க்குரைப்பேன், என்னசெய்வேன்? ஏதுமறிந்

வேறு

9. மாற்றறி யாதசெ ழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாதபெ ருந்தவ ருள்ளக்
கோயிலி ருந்தகு ணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக்* கனியே
விச்சையில் வல்லவர் மெச்சுவி ருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங்க ளித்தாய்
தன்னிக ரில்லொரு சற்குரு மணியே.

*சிற்றம்பலம் - சித் + அம்பரம் = ஞானசபை



10. சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென தாச்சு,
தேவர்களும் முனிவர்களும் பேசுவதென் பேச்சு,
இச்சமய வாழ்வில்எனக் கென்னஇனி ஏச்சு?
என்பிறவித் துன்பம்எலாம் இன்றோடே போச்சு.

## திருமொழி

### குலசேகரப்பெருமாள்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

1. மறந்திகழும் மனமொழிந்து வஞ்ச மாற்றி
வன்புலன்க ளடக்கிஇடர்ப் பாரத் துன்பம்
துறந்திருமுப் பொழுதேத்தி எல்லை யில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியை, என்னை
ஆட்கொண்ட ஆரமுதை, அன்பி னோடு
புறம்பென்னைத் தொடர்வானைப் போற்றி நானே
புண்கணீர் சொரியஎன்றோ நிற்கு நாளே?

2. வன்பெருவா னகம்உய்ய அமரர் உய்ய,
மண்ணுய்ய மண்ணுலகில் மனிதர் உய்ய,
துன்பமிகு துயர்அகல, அயர்வொன் றில்லாச்
சுகம்வளர, அகம்மகிழும் தொண்டர் வாழ,
அன்பொடுதென் திசைநோக்கி அருள்செய் வானை
அடியவர்கட் காரமுதை அழகன் றன்னை
இன்பமிகு குழுவோடு கண்டு நானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கு நாளே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமங்கை ஆழ்வார்

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

1. கள்வனேன் ஆனேன் படிறுசெய் திருப்பேன்
 கண்டவா திரிதந்தே னேனும்
தெள்ளியேன் ஆனேன் செல்கதிக் கமைந்தேன்
 சிக்கெனத் திருவருள் பெற்றேன்:
உள்ளெலாம் உருகி, குரல்தழுத் தொழிந்தேன்
 உடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலும்நான் அழைப்பன்
 நம்பன்என் ஆண்டவன் நாமம்.

2. குலந்தரும், செல்வம் தந்திடும், அடியார்
 படுதுய ராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும், நீழ்விசும் பருளும்,
 அருளொடு பெருநிலம் அளிக்கும்,
வலந்தரும், மற்றுந் தந்திடும், பெற்ற
 தாயினும் ஆயின செய்யும்;
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
 நம்பன்என் ஆண்டவன் நாமம்.

## சடகோபர்

### தரவுகொச்சகக்கலிப்பா

கண்டேன் கமல மலர்ப்பாதம்; காண்டலுமே
விண்டே ஒழிந்த வினையா யினஎல்லாம்;
தொண்டேசெய் தென்றுந் தொழுது வழியொழுக,
பண்டே பரமன் பணித்த பணிவகையே.

42127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Copies of this book can be had at*

**THE LANKABHIMANI PRESS**
Chavakachcheri
CEYLON

**Price : Annas Four**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org